# பேன் தொல்லையிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்.



## மனிதனில் காணப்படும் பேன்கள்

மனிதனில் புற ஒட்டுண்ணிகளாக வாழும் பேன்கள் மூன்று வகைப்படும்.

1. தலைப்பேன்
2. உடற்பேன் அல்லது சீலைப் பேன்
3. நண்டுப்பேன்

## தலைப்பேன்களைப் பற்றி ........

* மனிதனின் தலைமயிரில் வாழ்கின்றன.
* சிறுவர்களே அதிகளவில் தொற்றுக்கு உள்ளாகின்றனர்.
* தொற்றுக்குள்ளான ஒருவரின் தலையில் 10 - 20 பேன்கள் காணப்படலாம்.
* பெண் பேன் ஒன்று நாள்தோறும் 6 தொடக்கம் 8 முட்டைகளை இடும். பேன் முட்டைகளே ஈர்கள் ஆகும்.
* தைபஸ் காய்ச்சல் போன்ற நோய்களை உண்டு பண்ணும் கிருமிகளை பேன்கள் காவக்கூடும்.
* பேன் எமது தோலைத்துளைத்த பின் எமது குருதியை உணவாக உட்கொள்கிறது.
* சொறிதலால் ஏற்படும் காயங்கள் நுண்கிருமி தொற்றுக்கு உள்ளாவதால் சீழ் பிடித்த காயங்கள் ஏற்படும்.
* காயங்களில் நுண்கிருமித்தொற்றுக்கள் ஏற்படுவதன் விளைவாக சிறுநீரக அழற்சியும் ஏற்படலாம்.

### பேன்களின் வாழ்க்கை வட்டம்

**பேன்**

7-9 நாட்கள் ↗ ↘

**பேன்குஞ்சு** ← **முட்டை (ஈர்)**

7-8 நாட்கள்

## தலைப்பேன் தொற்றுக்கான அறிகுறிகள்:

1. தலையில் தொடர்ச்சியான சொறிவு.
2. தலையில் ஏதோ ஒன்று ஊர்வதைப் போன்ற உணர்வு.
3. தொடர்ச்சியான சொறிதலால் தலையில் காயங்கள், சில சமயம் சீழ் பிடித்த சிறிய பருக்கள் காணப்படுதல்.
4. கழுத்தின் முன்னும் பின்னும் நிணநீர்கணுக்கள் வீங்குவதால் சிறிய கட்டிகள் காணப்படல்.
5. தலையில் பேன்கள், ஈர்கள் இருப்பதை அவதானித்தல்.

## தலைப் பேன்கள் எவ்வாறு பரவுகின்றன ?

1. தலைப்பேன் தொற்றுள்ள நபரின் தலை, தலைமயிருடன் நெருங்கிய தொடுகை மூலம்.

2. தலைப்பேன் தொற்றுள்ள நபர் உபயோகித்த சீப்பு, தலை சீவும் பிறஸ், படுக்கை, தலையணை, துவாய், தொப்பி, மற்றும் ஆடைகளைப் பாவிப்பதன் மூலம்.

## தடுக்கும் முறைகள்

1. பேன் தொற்றுள்ளவர்களின் சீப்பு, தலை சீவும் பிரஸ் போன்றவற்றை பாவிக்காது விடல்.

2. சுத்தமான சீப்பு பாவித்து தலை சீவுதல்

3. ஒழுங்காக முழுகுதல்

4. தன்னைத்தான் துப்பரவாக வைத்து கொள்ளல்.

5. தலைமயிரைக் கட்டையாக வெட்டிக் கொள்ளல்.

6. தொற்றுள்ள துணிகளை கொதிநீரில் 1/2 மணி நேரம் அமிழ்த்தி வைத்தல்.

7. தொற்றுள்ள துணிகளுக்கு அயன் போடுவது ஒரு சுலபமான முறையாகும்.

8. பேன்சீப்பு பாவித்து பேன்களை அகற்றுதல்.

9. தலைப்பேன் முட்டைகளை ஈர்வலி கொண்டு சீவினால் அகற்றலாம்.

10. வைத்திய ஆலோசனைப்படி பேன் மருந்து இடுதல்.

## பேன் மருந்து ஈர்களை அழிக்குமா? ? ?

## இல்லை ......

## ஈர்களை அழிப்பதற்கு ....

முதல் தடவை பேன் மருந்து இடும் போது எஞ்சிய ஈர்கள் அனைத்தும் 7 - 10 நாட்களில் பேன்கள் ஆகிவிடும். எனவே கற்தடவை பேன் மருந்திட்டு 7 - 10 நாட்களின் பின் மீண்டும் ஒரு தடவை பேன் மருந்து இடுவதால் ஈர்களில் இருந்தும் விடுதலை பெறலாம்.

### உங்களின் கவனத்திற்கு....

* சில வகை பேன் மருந்துகளை அதிக நேரம் தலையில் தங்க விடுவதால் நச்சுத்தன்மை ஏற்படலாம். எனவே அவ்வாறான மருந்துகளை வைத்தியர் களின் அறிவுறுத்தல்களுக்கு அமைய உபயோகிக்க வேண்டும்.

* கண்கள், வாய் போன்ற இடங்களில் பேன் மருந்து தற்செயலாகப் படுவதைத் தடுக்க வேண்டும். இல்லையேல் எரிவு ஏற்படும். எரிவு ஏற்படின் சவர்க்காரம் இட்டு நன்றாகக் கழுவ வேண்டும்.

# பேன்களின் தொல்லை
# ஒரு
# கவலையே இல்லை!

வெளியீடு :
சமுதாய மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.
**2007, MAY.**

*தயாரிப்பு உதவி :*
**S.** *ஸ்கந்தன்*
*4ம் வருட மருத்துவ பீட மாணவன்*
**(2002/FM/101)**

அனுசரணை :
லயன்ஸ் கழகம்,
கொக்குவில்.